இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்
சட்டக் கற்கைகள் திணைக்களம்
சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - மட்டம் 4
இறுதிப் பரீட்சை- 2021/2022
**LLU4805 – ஒப்பந்தச் சட்டம்**
காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி : 10 ஜனவரி 2023 காலம் : பி.ப 01.30 – பி.ப 04.30

மொத்த வினாக்களின் எண்ணிக்கை (08) எட்டு

தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

பகுதி I இல் இருந்து ஒரு (01) வினாவையும் பகுதி II இல் இருந்து நான்கு (04) வினாக்களையும் தெரிவு செய்து ஐந்து (05) வினாக்களுக்கு விடையளிக்க

## பகுதி I

### முகவராண்மைச் சட்டம்

ஒரு (01) வினாவிற்கு மாத்திரம் விடையளிக்குக.

1. ஜனவரி 2022 இல் ரமேஷ் என்பவன் நிமால் என்பவனை அவனது முகவராக நியமித்ததுடன் கொழும்பு 07 இல் உள்ள அவனது அடுக்குமாடி வீடொன்றை விற்பனை செய்ய பணித்தான். முகவராண்மை உடன்படிக்கைக்கு அமைய ரமேஷ் நாட்டிலிருந்து இடம்பெயருவதற்கு பணம் தேவைப்படுவதால் ஆறு மாத காலங்களுக்குள் ரூபா.3 மில்லியன் விலைக்கு அடுக்குமாடி வீடு விற்கப்பட வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்குள் நிமாலால் கொள்வனவாளர் ஒருவர் கண்டறியப்படின் அவனுக்கு ரூபா 250, 000 ஊதியமாக வழங்க வாக்குறுதி அளிக்கப்பட்டது. நிமால் விற்பதற்கான இடங்களை பல்வேறு பத்திரிகைகளிலும் இணையத்தளங்களிலும் விளம்பரப்படுத்தியதுடன் ரமேஷிடம் இருந்து விளம்பரக் கட்டணத்தின் இரு மடங்கை கோரினான். நிமால் கோரிய தொகையே விளம்பரப்படுத்தலுக்கான உண்மையான தொகை என்ற எண்ணத்தில் ரமேஷ் அளித்தான். மே மாதம் அளவில் வீட்டை ரூபா 2.5 மில்லியனுக்கு கொள்வனவு செய்ய சமலி என்பவள் இணங்கியதுடன், இந்த கொள்வனவை வெற்றிகரமாக நிமால் மேற்கொண்டால் அவனுக்கு ரூபா 150,000 வழங்குவதற்கு அவள் இணங்கினாள். எவ்வாறாயினும் நிமால் சமலிக்கு ரூபா 2.5 மில்லியனுக்கு வீட்டை விற்பதற்கு ரமேஷின் மனதை மாற்றினான். இணங்கியவாறு சமலி நிமாலுக்கு தரகை செலுத்தினாள். பின்னர் நிமால் தொடர்பான உண்மையை அறிந்த ரமேஷ் அவனுக்கு ஊதியத்தை வழங்க மறுத்தான்.

இவ்விடயம் தொடர்பில் ரமேஷ் உமது அறிவுரையை நாடுகிறான்.

பொருத்தமான எடுத்துக்காட்டுகளுடன் ரமேஷிற்கு அறிவுறுத்துக.

(20 புள்ளிகள்)

2. பின்வரும் கூற்றுகளின் வலிதாந்தன்மையை ஆராய்க

(அ) முகவராண்மைச் சட்டமானது சில கடமைகளை முதல்வர் மீது சுமத்துகிறது.

(ஆ) அவசியத்தாலான முகவராண்மை ஒன்று உருவாக்கப்பட சில நிபந்தனைகள் திருப்தி செய்யப்படல் வேண்டும்.

ஒவ்வொரு பகுதிக்கும் 10 புள்ளிகள்
(10 x2 = 20 புள்ளிகள்)

## பகுதி II
## ஒப்பந்தச் சட்டம்

நான்கு (04) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.

3. புஞ்சி மெணிக்கே மற்றும் சுமனபால ஆகியோர் வாழ்நாள் அக்கறையை (life interest) ஒதுக்கி அவர்களது தோட்டமான "அம்பககவத்த"வை தமது ஒரே மகளான ரசங்கிக்கு அவர்களது மருமகனான யசரவை இணை நன்கொடை பெறுபவராக கொண்டு கொடை உரித்து மூலம் நன்கொடை அளித்தனர். அவர்கள் அனைவரும் அம்பககவத்த தோட்டத்தில் வாழ்ந்தனர். திருமண காலத்தின் போது ரசங்கியும் யசரவும் ரசங்கியின் பெற்றோர்களை ஒரு பாரமாக எண்ணத் தொடங்கினர். நாளடைவில் ரசங்கி தமது பெற்றோர்களது மருத்துவச் செலவுகளுக்கு பணம் அளிக்க மறுத்தாள். ரசங்கி புஞ்சி மெணிக்கேவை வீட்டு வேலை செய்வதிலிருந்து தடுத்ததுடன், சுமனபாலவை சகல சுத்தப்படுத்தல் மற்றும் தோட்ட வேலைகளை செய்யக் கோரினாள். மேலும் மதுபோதையுற்ற யசரவால் பல தடவைகள் சுமனபால கடுமையாக தாக்கப்பட்டார். புஞ்சிமெணிக்கேயும் சுமனபாலவும் தமது மகளான ரசங்கிக்கு அளித்த கொடையை கை மீட்க எண்ணுவதுடன் உமது அறிவுரையை நாடுகின்றனர்.

வாழ்வோர் இடைக் கொடை (*donatio inter vivos*) தொடர்பான சட்டத்தை எடுத்துக்காட்டி புஞ்சி மெணிக்கேவிற்கும் சுமனபாலவிற்கும் அறிவுறுத்துக.

உமது வாதத்தை ஆதாரப்படுத்துவதற்கு ஏதேனும் பொருத்தமான தீர்ப்புச்சட்டங்கள் மற்றும் நியதிச்சட்ட உறுப்புரைகள் என்பனவற்றை குறிப்பிடுக.

(20 புள்ளிகள்)

4. கொழும்பில் அழகு சாதன நிலையமொன்றை சொந்தமாக மகேஷா கொண்டுள்ளதுடன் அழகு சாதனப் பொருட்களை கொள்வனவு செய்து விற்பனை செய்தாள். அவள் சில சட்ட முரணான ஒப்பந்தங்களை மேற்கொண்டமைக்காக குற்றம் சாட்டப்பட்டிருக்கிறாள். பின்வரும் ஒப்பந்தங்கள் சட்ட முரணானவையா அல்லது இல்லையா என்பது குறித்தும், இந்த ஒப்பந்தங்களின் சாத்தியமுள்ள விளைவுகள் குறித்தும் உமது அறிவுரையை மகேஷா நாடுகிறாள்.

ஒவ்வொரு ஒப்பந்தம் தொடர்பிலும் பொருத்தமான தீர்ப்புச் சட்டங்களை எடுத்துக்காட்டி மகேஷாவிற்கு அறிவுறுத்துக.

(அ) மகேஷாவின் முன்னாள் பணியாளரான கங்கா என்பவள் மகேஷாவின் அழகு சாதன நிலையத்தில் தனது வேலையை நிறைவு செய்த பின்னர் காலியில் தனது சொந்த அழகு சாதன நிலையத்தை ஆரம்பித்தாள். மகேஷாவுடனான கங்காவின் தொழில் ஒப்பந்தமானது "தொழில்கால நிறைவின் பின்னர் நீர் ஏதேனும் போட்டியாளர்களுக்காக பணியாற்றக்கூடாது என்பதுடன், பன்னிரெண்டு வருட காலத்திற்கு இலங்கையில் எங்கும் அழகு சாதன நிலையமொன்றை ஆரம்பிக்கக்கூடாது." எனும் வாசகத்தை கொண்டிருந்தது.

(08 புள்ளிகள்)

(ஆ) மகேஷா வெளிநாட்டிலிருந்து ரூபா.1000,000 பெறுமதியான அழகு சாதனப் பொருட்களை இறக்குமதி செய்தாள். எவ்வாறாயினும் அக்காலப்பகுதியில் நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த பயணத் தடை காரணமாக சுங்கத்திடம் இருந்து அழகு சாதனப் பொருட்களை அவளால் பெற முடியவில்லை. பயணத் தடைகள் தளர்த்தப்பட்ட பின்னர் மகேஷா சுங்கத்திடம் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அழகு சாதனப் பொருட்களை பெற முயற்சி செய்தாள். எவ்வாறாயினும் சுங்க அதிகாரிகள் அவள் இறக்குமதி செய்த அழகு சாதனப் பொருட்கள் இரு நாட்களுக்கு முன்னர் தடைசெய்யப்பட்டுள்ளதாக தெரிவித்து, அவளது அழகு சாதனப் பொருட்களை கைப்பற்றிருந்தனர்.

(06 புள்ளிகள்)

(இ) மகேஷா அவள் வியாபாரத்தை ஆரம்பித்த போது அழகு சாதனப் பொருட்களை விற்பதற்காக அனுமதிப் பத்திரமொன்றைப் பெற்றாள். இவ் அனுமதிப்பத்திரம் 6 மாதங்களுக்கு முன்னர் காலாவதியானது. எவ்வாறாயினும் மகேஷா இதை கவனிக்காது தனது வியாபார நடவடிக்கைகளை நிறுத்தாது தொடர்ந்தாள். நாமலி என்பவள் மகேஷாவிடம் இருந்து ரூபா. 65,000 பெறுமதியான அழகு சாதனப் பொருட்களை கடனுக்கு கொள்வனவு செய்தாள். பின்னர் விற்பனையின் போது மகேஷா காலாவதியான அனுமதிப்பத்திரத்தை கொண்டிருந்தாள் என கண்டறிந்த நாமலி கடனை செலுத்த மறுத்தாள்.

(06 புள்ளிகள்)

(8+6+6 = 20 புள்ளிகள்)

5. இணையத்தின் ஊடாக *ட்ரிப் அன்ட் ஸ்டேய் பிரைவட் லிமிடட்* எனும் நிறுவனத்திடமிருந்து நுவரெலியாவிற்கான வருட இறுதி விடுமுறை சுற்றுலாவிற்காக யஸஸ் என்பவன் விருந்தினர் தங்குமிடம் (Guest house) ஒன்றை வாடகைக்கு அமர்த்தினான். இணையத்தின் ஊடாக பதிவு செய்யும் செயன்முறையின் போது அவன் ஒப்பந்தத்தில் உள்ள சகல வாசகங்களையும் நிபந்தனைகளையும் வாசித்தும் புரிந்துணர்ந்தும் உறுதி செய்யுமாறு கோரப்பட்டான். பதிவு செய்யும் இணையதள பக்கத்தில் சகல வாசகங்களையும் நிபந்தனைகளையும் தரப்பட்ட இணைப்பில் (Hyper link) இருந்து பதிவிறக்கம் செய்யக்கூடியதாக இருந்தது. வாசகங்களையும் நிபந்தனைகளையும் பதிவிறக்கம் செய்யவோ வாசிக்கவோ முயலாத யஸஸ் உறுதி செய்யும் பொத்தானை (confirm button) அழுத்தினான். அவன் நுவரெலியாவை அடைந்த போது பின்வரும் வாசகங்களை உள்ளடக்கிய ஆவணமொன்றில் கையெழுத்திடுமாறு விருந்தினர் தங்குமிடத்தின் வாசலில் கோரப்பட்டான் :

(அ) "இணையத்தின் ஊடாக விருந்தினர் தங்குமிடத்தை பதிவு செய்யும் போது வாசித்து உறுதி செய்த ஒப்பந்தத்தின் சகல வாசகங்களையும் நிபந்தனைகளையும் வாடகைக்கு பெறுபவர் ஏற்பதாக உறுதி செய்கிறார்."

(ஆ) "விருந்தினர் தங்குமிடத்தில் உள்ள உபகரணங்களின் பாவனையின் போது ஏற்படும் ஏதேனும் குறைபாட்டால் வாடகைக்கு அமருபவரிற்கு ஏற்படுத்தப்படும் ஏதேனும் இழப்புகளுக்கு *ட்ரிப் அண்ட் ஸ்டேய்* பொறுப்பாகாது."

விருந்தினர் தங்குமிடத்தில் முன்னர் தங்கியிருந்த ரிமா என்பவர் எரிவாயுவை செயற்படுத்தும் கருவியை (Gas Regulator) பிழையாக பொருத்தியதன் காரணமாக சமையல் அறையாக உபயோகிக்கப்பட்ட பின்புறமிருந்த அறையில் எரிவாயு கசிவு ஏற்பட்டது. எரிவாயு கசிவு குறித்து அறியாத யஸஸ் அவனது முதல்நாள் இரவில் (பிரதான மின் வழங்கியை செயற்படுத்துவதற்காக) பின் அறைக்கு சென்றான். யஸஸ் மின் வழங்கியை செயற்படுத்திய போது எரிவாயு வெடித்து அவன் கடும் காயமுற்றான். *ட்ரிப் அண்ட ஸ்டேய் பிரைவட் லிமிடட்* இடமிருந்து நட்ட ஈடு பெற யஸஸ் எண்ணுகிறான்.

யஸஸ் உம்மை அவனது சட்டத் தரணியாக நியமிக்கிறான். யஸஸிற்கு அறிவுறுத்துக. (உமது விடையில் இலத்திரனியல் ஒப்பந்தங்கள் தொடர்பான சட்டங்களை ஆராய நீர் தேவைப்படுத்தப்படவில்லை.)

(20 புள்ளிகள்)

6. கட்டாரில் இரு வருட காலம் சிற்பியாக தொழில் ஒப்பந்தத்தை நிறைவு செய்த பின்னர் மில்ஹான் என்பவன் அண்மையில் இலங்கைக்கு திரும்பினான். மில்ஹான் தனது சகல சேமிப்புகளையும் பயன்படுத்தி இலங்கையில் சொந்த வியாபாரமொன்றை ஆரம்பிக்க எண்ணினான். அருகம்பே கடற்கரைக்கு அண்மையில் சிறிய கடையொன்றை கொண்டுள்ள நெத்மி என்பவள் அதனை ரூபா 175,000.00 வருடாந்த வாடகைக்கு அளிக்க இணங்கினாள். பலகையை செதுக்குவதில் ஆர்வமுள்ள மில்ஹான் சுற்றுலா பயணிகளை கருத்திற் கொண்டு வாடகைக்கு பெற்ற இடத்தில் ஒரு நினைவுச் சின்ன கடையை ஆரம்பிக்க திட்டமிட்டான். நெத்மி அக்கடையை முன்னர் உணவு விற்பவருக்கு வாடகைக்கு வழங்கியிருந்ததுடன், மில்ஹானுக்கு கடையை வாடகைக்கு அளிக்க இணங்கிய போது அவர் வியாபாரமின்மை காரணமாக அந்த இடத்திலிருந்து நீங்கியிருந்தார். விடுமுறை காலத்திற்கு கடையை தயார் செய்து பெற வேண்டும் என்பதை உறுதி செய்வதில் ஆர்வமாக இருந்த மில்ஹான் நெத்மி உடனான ஒப்பந்தத்தில் டிசம்பர் 01 ஆம் திகதி அக்கடைக்கு குடிசெல்ல முடியும் என்பதை குறிப்பிட்டு நிபந்தனையொன்றை விதித்திருந்தான். இந்நிலையில் அவன் கடையில் விற்பனை செய்வதற்காக பலகையில் செதுக்குவதற்கான பொருட்களை வாங்குவதற்கு அவனது சேமிப்பில் இருந்து ரூபா 80,000 அளவில் முதலிட்டிருந்தான்.

அறிவு குறைபாட்டின் காரணமாக நெத்மி மற்றும் மில்ஹான் ஆகியோர் ஒப்பந்தத்தை எழுதும் போது பின்வரும் வாசகத்தை உள்ளடக்கியிருந்தனர்,

*"ஏதேனும் காரணத்தால் டிசம்பர் முதலாம் திகதி அளவில் கடையின் உடமை மில்ஹானுக்கு வழங்கப்படாத போது ஒப்பந்த முறிவு ஒன்று ஏற்படின் ஒப்பந்தம் முடிவுறுத்தப்படுவதாக கருத்தில் கொள்ளப்படுவதுடன், நெத்மி மில்ஹானுக்கு ரூபா 85,000 அல்லது மில்ஹான் கொள்வனவு செய்துள்ள பொருட்களை மீளளித்து அல்லது விற்பனை செய்து பெறக்கூடிய ஏதேனும் தொகையை நட்ட ஈடாக வழங்க உடன்படுகிறாள்."*

உடன்பட்டவாறு டிசம்பர் 01 ஆம் திகதி அன்று மில்ஹானுக்கு உடைமையை கையளிக்க நெத்மிக்கு இயலாமல் போனது.

ஒப்பந்த சட்டத்தின் கீழ் மேலுள்ள வாசகம் செயற்படுத்தக்கூடியதா என பொருத்தமான எடுத்துக்காட்டுகளை எடுத்துக்காட்டி நெத்மிக்கு அறிவுறுத்துக.

(20 புள்ளிகள்)

7. "ஒரு கூற்று குறிப்பிடப்படும் போது உண்மையாக இருந்து பேச்சு வார்த்தைகளின் போது உண்மையற்றதாக ஆகுமெனின் அது உண்மையற்றதாக ஆகியதை அறிந்த நபர் மற்றையவருக்கு சந்தர்ப்பங்களின் மாற்றத்தை வெளிப்படுத்தும் கடப்பாடு உடையவர் ஆவார்."

with v O'Flanagan (1936) Ch 575

ஒப்பந்தச் சட்டத்தின் கீழ் பிறழ் பகர்வை தொடர்புறுத்தி மேலுள்ள கூற்றை கணிக்க.

பொருத்தமான தீர்ப்புச் சட்டங்களுடன் உமது விடையை ஆதாரப்படுத்துக.

(20 புள்ளிகள்)

8. பின்வருவனவற்றின் எவையேனும் <u>இரண்டின் (02)</u> மீது சிறுகுறிப்பு எழுதுக.

i. "குறித்த நிறைவேற்றம்" எனும் நிவாரணம்
ii. பொருளாதார அச்சுறுத்தல்
iii. உரோமன் டச்சு சட்டத்தின் கீழ் நல்லேது

ஒவ்வொரு பகுதிக்கும் 10 புள்ளிகள்
(10 x2 = 20 புள்ளிகள்)

பதிப்புரிமை பெற்றது